Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 8 (27-5-66) இதழ் 109

பராபவ வைகாசி 14 ஸபர் 6 வெள்ளிக்கிழமை




## யாழ்ப்பாணத்தில மின்மினி

நேற்றிரவு யாழ்ப்பாண நகரம் சுமார் பத்துத் தடவைகள் இருளில் மூழ்கியது. நிமிடத்துக்கு ஒரு முறை அல்லது, இரு நிமிடங்களுக்கு ஒரு முறை மின்சார வெளிச்சங்கள் அணைவதும் மின்மினிபோல் ஒளிதருவதுமாய் இருந்தன. சமீப காலத்தில் மின்சார இலாகா மேற்கொண்ட மின்மினி விளையாட்டுக்களில்இதுமிகச் சிறந்த ஒன்ருகக் கருதப்படுகிறது.

# இந்திய ரயில் விபத்து: 20 பேர் மாண்டனர்

சென்னை, மே 26

பங்களூர்—பூனு கடுகதி ரயில் இன்று அதிகாலை விபத்துக்குள்ளானதில், இருபதுபேர் ஸ்தலத்திலேயே மாண்டதாக முதலில் கிடைக்கப்பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தவிபத்து லோலண்ட் அருகே ஏற்பட்டது.

ரயில் விபத்தில் காயமடைந்த இருபதுபேர் ஆஸ்பத்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்துக்கான காரணம்பற்றி உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

அபாயகரமான

## மருந்துகள் விநியோகத்தில் தடை விதிக்கப்படும்

கொழும்பு, வியாழன்

அபாயகரமானமருந்துகள் விநியோகத்தில் கட்டுப்பாடு விதிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

ஆங்கில வைத்தியர்கள், ஆயுள்வேத வைத்தியர்கள், ஆகியோர் இம்மருந்துகளை கட்டுப்பாடின்றி உபயோகிப்பதாலேயே அரசாங்கம் இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இறக்குமதியாகும் மருந்துகள் தரமானவையா என பரிசோதனை செய்வதற்கும் ஒரு சபை நியமிக்கப்படவிருக்கிறது.

ஆங்கில வைத்தியர்களைக் கொண்ட இலங்கை வைத்திய சபை, மருந்துகள் விநியோகத்தில் கட்டுப்பாடிருக்கவேண்டுமென அரசாங்கத்தைக்கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றை சமீபத்தில் நிறைவேற்றியிருந்ததோடு சுகாதார மந்திரியையும் சபையின் பிரதிநிதிகள் சந்தித்து இதுபற்றி எடுத்துக்கூறினர்.

## "வேலையில்லாத் திண்டாட்டத்தை கைத்தொழில் மூலம் தீர்க்கலாம்"

சழிபுரம், வியாழன்

"எமது பண்டைய சமுதாயத்தினர் தமக்கு வேண்டிய உணவு, உடைபோன்ற அத்தியாவசியப் பொருள்களை தாமேஉற்பத்தி செய்து தேவைக்கு மேற்பட்டதை வேறு நாடுகளுக்கு அனுப்பினர். ஆனல் இன்று நாம் பெற்ற சுயராஜ்யம் எமது நாட்டின் பொருள்வளத்தை கட்டியெழுப்பும் பணியில் அதிகம் ஈடுபாடு கொண்டுள்ளவர்களாக விளங்குகின்ரேம். இருந்துவந்த அமைப்பை மாற்றி பல சிக்கல்களை உண்டுபண்ணி மீண்டும் பழையநிலைமைக்கு செல்லவேண்டியவர்களாகிவிட்டோம்."

மூளாயில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பட்டு. பருத்திநூல் நெசவு திறப்பு விழா வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் வட்டுக்கோட்டை எம் பி திரு அ அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முன்னைநாள் மலாயா எம் பி திரு வே இராசா இவ்விழாவுக்குத் தலைமை வகித்தார்.

வடபகுதி கைத்தொழிற் பகுதி அதிபர் திரு எஸ் கந்தவனம் குத்துவிளக்கேற்றிப் புதிய நெசவகத்தைத் திறந்துவைத்தார்.

திரு அ அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: வள்ளுவர் காலம்தொட்டுஎமது காலத்தில் வாழ்ந்த காந்தி மகான் காலம்வரை கைத்தறி நெசவின் வளர்ச்சி பலவகையிலும் சிறப்புப் பெற்று வருகின்றன. எமது நாட்டின் துணி உற்பத்தியை மேலும் பெருக்குவதற்கு நாடு பூராகவும் ஆயிரம் புதிய நெசவு நிலையங்கள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. அரசாங்கம் குடிசைப் பகுதியினர் மூலம் நெசவு நிலையங்களை தொகுதிவாரியாக திறக்க ஆயத்தங்கள் செய்துகொண்டிருக்கையில் தனி நபர் ஒருவர் ஓர் புதிய முறையில் பட்டு நூல மூலம் கைத்தறி நெசவு செய்ய முன்வந்தது பாராட்டத் தக்கதாகும்".

வடபகுதி கைத்தொழில் பகுதி அதிபர் எஸ். கந்தவனம்பேசுகையில், எமது நாடு கைத்தொழில், கமத்தொழில் ஆகியவற்றின் மூலம்தான் முன்னேற வேண்டியுள்ளதென்றும் வேலையில்லாத்திண்டாட்டத்தை கைத்தொழில் மூலம்தான் நிவிர்த்தி செய்ய முடியுமென்றும் கூறினர்.

வலி மேற்கு காரியாதிகாரி ந. மாணிக்கநடராசா, எஸ். கனகசபை, எஸ் குமரையா உட்பட பலர் பேசினர்.

## கானு ஸ்தானிகராலயம் மூடப்பட்டது

கொழும்பு, வியாழன்

இலங்கையில் உள்ள கானுவின் ஸ்தானிகராலயம் மூடப்பட்டுவிட்டது. ஸ்தானிகராலயம் விடுத்த ஒரு அறிக்கையில் நாட்டின் அரசாங்க செலவுகளைக் குறைக்கும் ஆட்சியாளரின் முயற்சியில் இலங்கை உள்ளிட்டு 21 நாடுகளில் உள்ள தங்கியிருக்கும் ஸ்தானிகராலயங்களைமூடி விடுவதென தீர்மானிக்கப்பட்டு அவற்றுக்குப் பதில் நாட்டில் தங்கியிராத ஸ்தானிகர்களை நியமிக்க முடிவுசெய்யப்பட்டதாகவும் அதன் பிரகாரம் இலங்கையில் ஸ்தானிகராலயம் மூடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபை

# 21வட்டாரங்கள்தான் கிராமசபைப் பகுதிகள் இல்லை

## டிசம்பரில் 17 தொகுதிகளில் தேர்தல்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாநகரசபையின் தேர்தல் இவ்வருடம் டிசம்பர் மாதம் நடைபெறும்போது இப்பொழுதுள்ளது போல் பதினேழு வட்டாரங்களுக்குமே அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்படுவார்களென்றும் இதன்பின் மூன்று நான்கு மாதங்களுக்குள் மேலும் நான்கு வட்டாரங்களைப் பிரித்து உபதேர்தல் வைக்கப்படுமென்றும் அறியப்படுகிறது.

யாழ்ப்பாணமாநகர சபையின் வட்டாரங்களை இருபத்தைந்தாக விஸ்தரிக்க வேண்டுமென மார்ட்டின் கமிஷன் தனது அறிக்கையில் சிபார்சு செய்திருந்த போதும் நல்லூர், கொக்குவில் கிராம சபைப் பகுதிகளைத்தவிர்த்து இருபத்தியொரு வட்டாரங்களாகவே விஸ்தரிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த இருபத்தியொரு வட்டாரங்களைப் பிரிப்பது மார்ட்டின் கமிஷன் அறிக்கையின் சிபார்சின்மீதே செயல்படுமெனவும் தெரிகிறது.

டெலிபோன் ஒற்றுகேட்டல்

## திரு. சிவஞானசுந்தரம் தலைவராவார்?

கொழும்பு, வியாழன்

டெலிபோன் ஒற்றுக்கேட்டல் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்படவிருக்கும் விசாரணைக் கமிஷனுக்கு ஒய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு, என், சிவஞானசுந்தரம் தலைவராக நியமிக்கப்படலாமெனத்தெரிகிறது.

இக்கமிஷனுக்குத் தலைவராகவிருந்த சி. பி. ஜி, அபயவர்த்தன ராஜினமாச் செய்ததைத்தொடர்ந்தே திரு சிவஞானசுந்தரம் இப்பதவிக்கு நியமிக்கப்படவிருக்கிருர்

தம்மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டதன் காரணத்தினுலேயே தாம் ராஜினமாச் செய்வதாக திரு அபயவர்த்தன தெரிவித்திருந்தார்

கமிஷனின் தலைவராக நியமிக்கப்படவிருக்கும் திரு. சிவஞானசுந்தரம் யாழ்ப்பாணத்தில் மாவட்ட நீதிபதியாக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய சுவீப்

மட்டக்களப்பு, வெள்ளி

91-வது சுவீப் சீட்டிழுப்பு இன்று மாலை 4 மணிக்கு மட்டக்களப்பில் நடைபெறும்.

முதல் பரிசு 1 லட்சம் ரூபாய். விரும்பியவர்கள் 21,500 ரூபா பெறுமதியான ஹில்மன்காரை இத்தொகையிலிருந்து பெறலாம்.

இரண்டாம் பரிசு 40,000 ரூபாய், இதில், 11,500 ரூ, பெறுமான ரெனுல்ட்கார் விரும்பியவர்களுக்கு கிடைக்கும்.

மூன்ரும் பரிசு 10,000 ரூபாய் தலா ரூபா 2000 கொண்ட 100 ஆறுதல் பரிசுகளும் உண்டு.

## 'சமுதாயத்தை திருத்தவந்த சமயஇலக்கியம் பெரியபுராணம்"

### சேக்கிழார் விழாவில் பேராசிரியர் வெள்ளைவாரணனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

"சமுதாயத்தை திருத்த எழுதிய வரலாற்றுச் சமய இலக்கியம்தான் சேக்கிழாரின் பெரிய புராணம் தத்துவம், பண்பாடு, அறநிலை இவைகளுக்கு அமைய பக்தி நெறி சொட்டச்சொட்ட திருத்தொண்டர் புராணத்தை உலகுக்கு அளித்தார் சேக்கிழார்"

யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இறுதிநாளாக நேற்று மாலை நடைபெற்ற சேக்கிழார் விழாவில் அண்ணமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறைத துணைப்பேராசிரியர் வித்துவான் க. வெள்ளைவாரணனர் சொற்பொழிவாற்றுகையில் மேற்கண்டவாறு சொன்னர் திரு. மு. வைரமுத்து தலைமைவகித்தார்.

'சேக்கிழார் வளர்த்த செந்தமிழ்' என்னும் பொருள்பற்றி வித்துவான் க. வெள்ளைவாரணர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

காவியம் ஒன்றில் கருத்து மட்டும்இருந்தால் போதாது கருத்துக்கு நிலைகளனுக உள்ள சொல்லும் இருக்க வேண்டும் சொல்லையும் பொருளையும் மாறுபடாது கருத்துக்கும் சொல்லுக்கும் உடன்பாடு இருக்கத்தக்கதாக திருத்தொண்டர் புராணத்தை சேக்கிழார் சுவாமிகள் பாடியிருக்கிருர்கள்

மக்களிடையே பேச்சு நடையில் பண்பு இருக்க வேண்டும் என்பதை சேக்கிழாரின் பெரிய புராணம் நமக்கு உணர்த்துகிறது. உயர்ந்த சொற்களை அருமையான முறையில் அடுக்காக அமைத்து மனிதர்களிடையே பண்பை ஏற்படுத்த முயல்கிருர். 'சுந்தரனுர் வந்தார்' என்று இப்படியான பண்பான கருத்துக்களைத்தருகிருர்.

ஆத்மீகத்துறையில் ஈழம், தென்னகம், இமயம் மூன்று இடங்களும் இணைக்கப்பட்டிருக்கின்றதென்பதை சேக்கிழாரின் பெரிய புராணம் எமக்கு கூறுகின்றது.

விழாவில் கவியரங்கம். நாடகம் ஆகியனவும் இடம் பெற்றன.

தோட்டத் தொழிலாளருக்கு

## சம்பள உயர்வும் 17-50 விசேஷ பஞ்சப்படியும்

### 29-ம் திகதி முடிவாகும்

கொழும்பு, வியாழன்

வருகிற 29-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேயிலை, ரப்பர் தோட்டத்தொழிலாளர்களுக்கு ஒரு முக்கிய தினமாக இருக்கும்.

தொழிலாளரின் தினச்சம்பளத்தில் மேலும் ஒரு ரூபாய் அதிகரிக்கும்படி இலங்கை தொழிலாளர் காங்கிஸ் விடுத்துள்ள கோரிக்கையை ஆராய, முதலாளிமார் சம்மேளனப் பிரதிநிதிகள் காங்கிரஸ் பிரதிநிதிகளைச் சந்திக்கிருர்கள்.

அதேசமயம், மாதம்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நாச யந்திரங்களின்மீது ஆதிக்கம் கொண்டுள்ள மனித சமுதாயத்தின் தலைவர்கள், அந்த நாச யந்திரங்களின் விளைவுகளைப் பரிபூரணமாக உணர்ந்து அவற்றை ஒழித்துவிடும் பக்ஷத்தில், நிரந்தர சமாதானம் கிட்டும். வல்லரசுகள் தங்கள் ஏகாதிபத்திய ஆசைகளை உதறினாலொழிய இந்தக்காரியம் சாத்தியமாகாது.

—காந்தியடிகள்

ஈழநாடு

EELANADU, National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna; Phone: 329

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு வைகாசி மீ 14 உ (27-5-66)

# கானா காட்டும் வழி

கானா அரசாங்கம் இலங்கையிலுள்ள தனது தூதரகத்தை மூடிவிட்டது. இலங்கையின் மீது கானா கோபதாபமோ, கொள்கை வேறுபாடோ கொண்டு, கானா அரசாங்கம் இதைச் செய்யவில்லை கானா அரசாங்கத்தின் சிக்கன நடவடிக்கைகளில் சிலநாடுகளிலுள்ள தனது தூதரகங்களை மூடுவதும் ஒன்று. கானாவின் இந்த நடவடிக்கை இலங்கைக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

கானாவும் சமீபத்தில் விடுதலையடைந்த நாடுதான். அங்கும் பல பிரச்னைகள் உள்ளன அதன் ஜனாதிபதியாக இருந்த டாக்டர் என்குருமா பதவியிலிருந்து நீக்கப்பட்டுபுதிய அரசாங்கம் ஆட்சிசெய்கிறது. பொருளாதாரக் கஷ்டங்கள் அங்கு ஏற்கெனவே இருந்திருக்கிறது. பொருளாதார நிலையைச் சீர்படுத்த சிக்கன நடவடிக்கைகளை மேற்கோள்ள வேண்டியது அந்தந்தநாடுகளின் கடமை பொதுவாகஒருநாடு வெளிநாடுகளிலுள்ள தனது தூதரகங்களை மூடுவதென்றால், பகைமை அல்லது கருத்து வேற்றுமையே காரணமாக இருக்கும் கானாவைப் பொறுத்தவரை இலங்கைக்கும் அதற்கும் பகைமையோ, கருத்து வேற்றுமையோ இருப்பதற்குநியாயமில்லை. இலங்கையிலுள்ள தனதுதூதரகத்தை மட்டும் கானாமூடிவிடவில்லை. இருபத்தியொரு நாடுகளிலுள்ள தனது தூதரகங்களை அது மூடிவிடத் தீர்மானித்துள்ளது. தனது நாட்டின் பொருளாதார நிலையை உணர்ந்தும், சிக்கன நடவடிக்கையின் அவசியத்தை அறிந்தும் இச்செயலை அது மேற்கொண்டுள்ளது. வரட்டுக்கௌரவத்தைப் பாராட்டாது கானா அரசாங்கம் இச்செயலை மேற்கொண்டதற்காகஅதைப்பாராட்ட வேண்டியதுடன் இதே வழியை இலங்கையும்பின்பற்றுவது மேலானதாகும்.

வெளிநாடுகள் பலவற்றில் உள்ள இலங்கையின் தூதரகங்கள்இலங்கைக்கு சரியான முறையில் உபயோகமாக இல்லை யென்பது அனைவரும் அறிந்த உண்மை. ஒவ்வொருதூதரகத்திற்கும் அரசாங்கம் பெருந்தொகையான பணத்தைச் செலவிடுகிறது. இதுவீண்விரயம்என்பதை முன்னைய அரசாங்கங்களும் உணர்ந்திருக்கின்றன. இலங்கையின் உற்பத்திப் பொருள்களுக்கு வெளிநாடுகளில் அதிக வாய்ப்பைத் தேடித் தரவோ, இலங்கைக்கு அத்தியாவசியமான பொருள்களை குறைந்த விலையில் பெற்றுத் தரவோ இத்தூதரகங்கள் சரியான முறையில் சேவை செய்யவில்லை. இத்தூதரகங்கள் இக்கடமைகளைச் சரிவரச்செய்வதாயிருந்தால் வெளிநாடுகளில் நமது உற்பத்திப் பொருள்களின் வர்த்தகத்தை அதிகரிக்கவோ வெளிநாடுகளிலிருந்து குறைந்த விலையில் நமக்குத் தேவையானபொருள்களை இங்கு தருவிக்கவோ அந்நாடுகளிலிருந்து நமக்குத் தேவையான உதவியைப் பெறவோ இங்கிருந்து அடிக்கடி மந்திரிமாரும் மற்றும் உயர்தர அதிகாரிகளும்தூது செல்ல வேண்டிய அவசியமிருக்காது.

ஸ்தானிகர்களுக்கும், ஸ்தானிகராலய ஊழியர்களுக்கும் அவர்களின்வசதிகளுக்கும் பெருந்தொகையான பணத்தைச் செலவழிப்பதுடன் நமது தேவைகளைக் கவனிப்பதற்காக மந்திரிமார்களையும் நமது செலவில் அடிக்கடி அனுப்புவதாகவிருந்தால், அந்தத் தூதரகங்கள் அவசியம்தானா?

நமது வர்த்தக கலாச்சாரத் தொடர்புகளுக்கும் நமது நாட்டின் அபிவிருத்திக்கும் மிக மிக அவசியமான நாடுகளுடன் மட்டும் நாம் ராஜீயத்தொடர்பு கொண்டு, அங்கு மட்டும் நமது தூதரகங்களை வைத்திருக்கலாம். பயனற்ற இடங்களில் கானா காட்டிய வழியைப் பின்பற்றி இலங்கையும் தனது தூதரகங்களை மூடிவிடுவது நல்லது. இதன்மூலம் நமது பொருளாதாரப் பிரச்னைகளைச் சிறிதளவாவது குறைக்களாம்.

## ஹிந்தி நூலுக்கு ரூ. 1000 பரிசு

எர்ணாகுளம், மே 26

கேரள பல்கலைக்கழக ஹிந்திப் பிரிவுப் பேராசிரியர் டாக்டர் மாலிக் முகம்மது எழுதிய ஹிந்தி புத்தகமொன்றுக்கு உத்தர பிரதேச அரசாங்கம் ஆயிரம் ரூபா பரிசுவழங்கியுள்ளது.

ஹிந்தி இலக்கியங்களுக்காக உ. பி. அரசாங்கம் அளித்த பரிசுகளில் இவருடைய நூல், இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

தென்னிந்திய பக்தி இயக்சம் பற்றியும் ஹிந்தி பக்தி இலக்கியத்தில் அதன் செல்வாக்குபற்றியும் இவர் தன் புத்தகத்தில் விபரித்திருக்கிறார்.

## தந்திக்கம்பிகள் திருட்டு அதிகரிப்பு

கொழும்பு, வியா.

தொலைபேசிக் கம்பிகள் நாட்டின் பல பாகங்களிலும் அடிக்கடி களவாடப்படுவது பற்றி பொலிசாருக்குத் தகவல்கள் கிடைத்துவருகின்றன. வருடமொன்றுக்கு சராசரி 100,000 ரூபா பெறுமதியுள்ள கம்பிகள் களவாடப்பட்டுவருகின்றன.

இக்கம்பிகளை மீண்டும் உருக்கி செம்புப் பாத்திரங்களைத் தயாரிக்கிறார்கள் என்றும், கசிப்புச்செய்வதற்கு உபயோகப் படுத்தும் கருவியையும் இதிலிருந்து செய்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

# சிங்களத்தை கட்டாய பாடமாக்க கோருவது ஏன்?

## செனட்சபையில் நடந்த சுவையான விவாதம்

கொழும்பு, புதன்

சகல பாடசாலைகளிலும் சிங்களம் கட்டாய பாடமாக்கப்படல் வேண்டுமென்று செனற்சபையில் நடைபெற்ற விவாதத்தின் போது செனற் உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் சாரம் இங்கே கொடுக்கப் பட்டுள்ளது.

செனற் உறுப்பினர் மஷூர்:

பாஷைப்பிரச்னையின் உள் சிக்கல்களையும் அதன் தன்மைகளையும்நான் அறிவேன். இந்த தீர்மானம் சிக்கல்களை உண்டாக்குவதற்காகவே உருவாக்கப் பட்டுள்ளது. சிலர் குழப்பங்களிலும், தடுமாற்றங்களிலும் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சிங்கள ஆசிரியர்கள் பாடசாலைகளில் நியமிக்கப் பட்டால் சிங்களத்தை எல்லோரும் படிப்பார்கள் என நான் எண்ணுகின்றேன்.

செனற்றர் டி' சூஸா: யாழ்ப்பாணத்தில் சிங்கள ஆசிரியர்கள் படிப்பிப்பதற்கு வழி வகுத்துவிட்டீர்களா? அதை செய்வதற்கு உங்களிடம் துணிவேது? இதைச்செய்ய தமிழரசுக்கட்சி விடுமா?

மந்திரி திருச்செல்வம் எதைஎப்பொழுது நாம் விரும்புகின்றோமோ அதனை அப்பொழுது படிப்போம்.

செனற்றர் மஷூர் பாஷைப் பிரச்னை பல சமுகத்தவர்களுடைய ஒற்றுமையுடனும் நல்லெண்ணத்துடனும்செய்யப்பட வேண்டிய விஷயம் இந்த பிரேரணையில் 'கட்டாயம்' என்ற சொல் உபயோகப்பட்டிருப்பது இந்த நாட்டின் ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்குமென்றே நான் எண்ணுகின்றேன். அத்துடன் நாட்டில் ஒற்றுமையை நிலைநாட்ட விரும்பும் அரசாங்கத்தின் நோக்கையும் தோற்கடித்துவிடும். ஆகையால் நான் இந்தபிரேரணையை எதிர்க்கிறேன்.

செனற் உறுப்பினர் திரு. எஸ். நடராசா சபைத்தலைவர் அவர்களே கௌரவ அங்கத்தவர்களே, இந்த பிரேரணையை எதிர்கட்சியினர் கொண்டுவந்திருக்கின்றனர் இதைஏன் அவர்கள் கொண்டுவந்துள்ளார்கள் என்பதை நாம் ஆராய வேண்டும் 1956-ம்ஆண்டில் 'சிங்கள சட்டத்தை' சுதந்திரக்கட்சி கொண்டு வந்திருந்தது, அதன் பின்னர் நாட்டை ஒன்பது ஆண்டுகள் பாதுகாத்து வந்தனர். அப்பொழுது இப்பிரேரணையைக் கொண்டுவர முயற்சி செய்யவில்லை இன்றைய சூழ்நிலையிலே இப்பிரேரணையை கொண்டுவருவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தை உகந்த முறையில் கண்டனம் செய்யலாம் இப்பிரேரணை மூலம் அரசாங்கத்தை 'சக்கை அடி' போட்டு விடலாம் என்று எதிர்க் கட்சியினர் நினைத்துவிடக்கூடாது.

செனற்றர் டி' சூஸா

நீங்கள் அரசாங்கத்திற்கு சக்கை அடிபோட்டுவிட்டீர்கள்.

செனற்றர் நடராசா

அரசாங்கத்தை பொறுத்தவரையில் ஒருவரும் சக்கை அடிபோடமுடியாது.

செனற்றர் டி சூஸா

தினமும் தமிழரசுக் கட்சி அரசாங்கத்திற்கு சக்கைஅடி போடுகின்றது.

செனற்றர் நடராசா

ஒன்பது ஆண்டுகள் ஆட்சியில் இருந்த ஒரு அரசாங்கத்திற்கு நீங்கள் சக்கை அடி போட்டு அனுப்பிவிட்டீர்கள்

செனற்றர் டி சூஸா

நான் உங்களை குழப்ப விரும்பவில்லை. சிலசமயங்களில் சிலர் இங்கே வீண் பேச்சு பேசுகின்றனர்.

செனற்றர் நடராசா

தேசிய அரசாங்கம் சிறுபான்மை மக்களின் குறைகளை சட்டமூலம் நிவிர்த்தி செய்துள்ளது. செனற்றர் மஷூர் சுதந்திர கட்சியின் தேர்தல் கொள்கையை வாசித்தார். அதில் இரு சமூகங்களுக் கிடையேயும் ஐக்கியம் வளர அவர்கள் கொண்டுள்ள முயற்சியை அது தெளிவாக்குகிறது

செனற்றர் பெரேரா

ஐயோ!

செனற்றர் நடராசா

நீங்கள் 'ஐயோ' அன்று கூறுகின்றீர்கள் ஆனால் நீங்கள் ஆட்சியில் இருந்தகாலத்தில் ஒற்றுமையை உண்டாக்க தவறிவிட்டீர்கள்.

செனற்றர் டி சூஸா

உங்களுடைய இரண்டாவது பாஷை என்ன?

செனற்றர் நடராசா

அதை பிறகு யோசிப்போம் ஆங்கிலம் ஒரு கட்டாய பாடம்.

செனற்றர் கரணகொட

அப்படி இல்லை.

செனற்றர் நடராசா

நீங்கள் சொல்வது பிழை நீங்கள் எங்கள் கருத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இதுதான் எங்கள் கருத்து.

செனற்றர் பெரேரா

டி. எம். கே.

செனற்றர் தஸநாயக்கா

அதுதான் சரி. உண்மையை கூறுங்கள்.

செனற்றர் நடராசா

பிறர் போலல்லாது நாங்கள் உண்மையை பேசுவோம். சிங்கள மக்களுக்கு சிங்களம் ஒரு கட்டாயபாடமாக்கப்பட்டுவிட்டது. ஆகையினால் இப்பிரேரணையின் பிரகாரம் தமிழ் மக்கள் கட்டாயமாக சிங்களம் படிக்க வேண்டுமென்ற கொள்கையை இப் பிரேரணை எடுத்துக்காட்டுகின்றது. தமிழ் மக்கள் சிங்களம் படிப்பதற்கு ஒருவிதமான எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. சிங்களச் சட்டம் நடைமுறைக்கு வரு

(6-ம் பக்கம் பார்க்க)

# நெசவு நிலையங்களை வாங்குவதில் இலங்கையரல்லாதவர் தீவிரம்

கொழும்பு, வியாழன்

ஜவுளி வர்த்தகம் இலங்கையரல்லாதவரிடமிருந்து எடுக்கப்படவிருப்பதை முன்னிட்டு இலங்கையிலுள்ள பதிவுப் பிரஜைகளும் விசா வைத்திருப்பவர்களுமான வர்த்தகர்கள் கைத்தறி, நெசவு நிலையங்களை வாங்குவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக அறியப்படுகிறது. [illegible]களாக இவர்கள் இவ்விதம் கைத்தறி நெசவு நிலையங்களை இலங்கையரிடமிருந்து வாங்கி வருவதாகவும் கைத்தறித் துணிகள் இறக்குமதி அடுத்தமாதம் முதல் தடைவிதிக்கப்பட இருப்பதால் இந்த நெசவு நிலையங்கள் மூலம் இவர்கள் நல்ல இலாபமடையலாமென நம்புவதாகவும் தெரியவருகிறது.

## நாட்டிலும் நகரிலும்

# அன்னவிசாரம்

பட்டினத்தடிகளுக்கு ஏற்பட்ட அன்னவிசாரம்போல இப்பொழுது இலங்கை மக்களுக்கு எப்படி அன்னம் ஊட்டலாம் என்ற மகா பிரச்னைதான் அரசாங்கத்தைப் பிய்த்துத் தின்னுகிறது. நம் நாட்டில் விளையும் அரிசி நமது தேவைக்கு போதாதென்பதும் கூடுதலாகத் தேவைப்படும் அரிசியை அரசாங்கம் பிறநாடுகளிலிருந்து வாங்கி ஜனங்களுக்குக் குறைந்த விலைக்கு விநியோகம் செய்கிறதென்பதும் எல்லோரும் அறிந்த விஷயம். இதனால் எத்தனையோ கோடி ரூபாய் அரசாங்கத்துக்குத் துண்டுவிழுகிறது.

இந்த நஷ்டத்தை அடைத்தால்தான் அரசாங்கப் பணம் வேறு முன்னேற்ற அபிவிருத்தி வேலைகளில் செலவு செய்யப்பட்டு நாடு செழிப்படைய ஏதுவாகும். இதை எவ்வாறு செய்யலாம் என்பதுபற்றிப் பலர் பலவிதமான யோசனை கூறியிருக்கிறார்கள். வெளிநாட்டு செலாவணியை மிச்சப்படுத்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் எல்லா முயற்சிகளிலும் குறுக்கே வந்து நிற்பது இந்த அன்னவிசாரம்.

இலங்கையில்எத்தனையோ பேர் கூப்பனே எடுப்பதில்லை. அவர்களுக்குக் கூப்பன் அரிசி தேவையில்லை. வேறு பலர் கூப்பன் அரிசியை வாங்கிக் கூடுதலான விலைக்குக் கடைக்காரர்களுக்கு விற்கிறார்கள். கூப்பன் அரிசியை விற்று பாணையும் மாவையும் வாங்கிக் காலத்தைக் கழிக்கும் ஏழைகளும் இருக்கிறார்கள்.

இப்படியான நிலையில் உலகமார்க்கட்டில் அரிசியின் விலை திடீரென்று ஏறிவிட்டது. எனவே அரசாங்கத்தின் கவலையும் அதிகமாகியிருக்கும். சீனத்துடன் செய்து கொண்ட அரிசி-ரப்பர் ஒப்பந்தத்தின் படி கிடைக்கும் அரிசியைத்தவிர பர்மா, தாய்லந்து முதலிய நாடுகளிடமும் அரிசி வாங்க வேண்டியிருக்கிறது.

அரிசிக் கட்டுப்பாட்டு முறையைத் துப்புரவாக நீக்கிவிட்டால் அதுவும் பொதுமக்களைப் பாதிக்கக் கூடுமென்ற பயத்தினால் அரசாங்கம் அதை நீடித்து வருகிறது. இவை எல்லாவற்றையும் நோக்கும்போது சில வருடங்களுக்கு முன்பு இருந்த தரம்பிரித்த அரிசி விநியோக முறையே சிறந்த மார்க்கம் என்று தோன்றுகிறது. 1942 முதல் 1955வரை இந்த முறை வழக்கிலிருந்தது என்று எனது ஞாபகம். இதன் பிரகாரம் கஷ்டப்பட்டு உழைக்கும் தொழிலாளிகளுக்கு கூடுதலான அரிசியும், உடம்புக்கு அலுப்பின்றி சீவனம் நடத்தும் சாதாரணமானவர்களுக்குக் குறைவான அரிசியும், குழந்தைகளுக்கு இன்னும் குறைவான அரிசியும் வழங்கப்பட்டு வந்தது.

அரிசி உற்பத்தியை உள்நாட்டில் அதிகரிப்பதற்காக அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகள் நல்ல பயன் அளிக்கும்வரை உலக மார்க்கட்டில் அரிசி விலை எப்படி எப்படி மாறுமோ நாம் அறியோம். இன்னும் பத்து வருடங்கள் சென்றாலும் நமது சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியுமோ என்பது சந்தேகமாயிருக்கிறது.

தரம் பிரித்து அரிசி விநியோகம் செய்தால் ஓரளவுக்காவது நிலைமையைச் சமாளிக்க முடியும்.

வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உகண்டா நெருக்கடி

# மன்னர் அரண்மனை துருப்புகள் வசமானது

## நாட்டுக்குத் துரோகமிழைத்ததாக ஓபோட்டே சதிக் குற்றச்சாட்டு

### கபாகா மன்னரின் கதிபற்றித் தகவலில்லை

அம்பாலா, மே 26

உகண்டா மத்திய அரசாங்கத்துக்கும் புகண்டா (மாகாண) கபாகா மன்னருக்குமிடையே ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து கபாகா மன்னர் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் கூறுகின்றன. புகண்டா மன்னரின் அரண்மனையை அரசாங்கத் துருப்புக்கள் கைப்பற்றிக்கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**சதிக்குற்றச்சாட்டு**

புகண்டா மன்னர் சர் பிறடரிக் முதேசா நாட்டுக்கு எதிராகக் கலகம் விளைவிக்கச் சதிசெய்தாரென்று உகண்டா அதிபர் டாக்டர் மில்டன் ஒபோட்டே குற்றம் சுமத்தியுள்ளார். ஏப்ரல் மாதம் 12-ம் திகதி எழுத்து மூலம் இந்தச் சதி நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டதாக அதிபர் ஒபோட்டோ தெரிவித்துள்ளார்.

**யுதாண்ட்டுக்கு விண்ணப்பம்**

இதற்கிடையில் புகண்டாவின் கபாகாவிடமிருந்து இரண்டாவதுதடவையாக வந்த விண்ணப்பத்தை ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் ஏற்கமறுத்துவிட்டார். உள்நாட்டுத் தகராற்றில் ஐ. நா. குறுக்கிடமாட்டாதென்று அறிவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

**பலர் மாண்டனர்**

அவசரகால நிலைமையும் அதனைத்தொடர்ந்து ஊரடங்குச்சண்டமும் அமுல் செய்யப்பட்டதைத்தொடர்ந்து ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டின்போது இரண்டு பிரிட்டிஷ்காரரர் உட்பட 20 பேர் மாண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உகண்டாவின் தலைநகரமாகிய அம்பாலாவில்தான் கலகங்கள் தலைதூக்கியுள்ளன.

**புகண்டா**

உகண்டாவின் நான்கு மாகாணங்களில் புகண்டாவும் ஒன்று. இதன் எல்லைக்குள்தான் மத்திய அரசாங்கத்தின் தலைநகரமாகிய அம்பாலா இருக்கிறது. புகண்டாவில் குடியரசு இருந்துவருகிறது. பரம்பபரையான மன்னரும் இங்கு உண்டு. 1963-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி அந்த மன்னரிதான் அந்தக் குடியரசுமுழுவதுக்கும் அதிபர். ஆனால் கடந்த மூன்று மாதங்களாக இந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

**அரசியல் சட்டம் ரத்தானது**

மூன்று மாதங்களுக்கு முன்னர் உகண்டா பிரதமர் ஒபோட்டே, அரசியல் சட்டத்தின் அமுலை ரத்துச் செய்துவிட்டுத் தாமே ஜனாதிபதி பதவியையும் மேற்கொண்டுவிட்டார். இதன் விளைவாக புகண்டா கவர்னர் சர் எட்வர்ட் முதாஸே ஜனாதிபதி பதவியை இழந்தார்.

எதிர் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதில் அவர் முனைந்தார். பார்லிமெண்டைக் கூட்டி, மத்திய அரசாங்கம் கம்பாலாவிலிருந்து இம்மாதம் 30-ந் திகதிக்குள் வெளியேறிவிடவேண்டும் என்று உத்தரவு விடுத்தார். உத்தரவை புகண்டா பார்லிமெண்டும் அங்கீகரித்தது.

**எதிரொலி**

புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து டாக்டர் மில்டன்ஒபோடோ அந்த உத்தரவு செல்லாது என்று அறிவித்து புகண்டா மாகாணம் முழுவதும் அவசரகால நிலைமையை டாக்டர் ஒபோட்டோ பிரகடனம் செய்தார். மத்திய அரசாங்கத் துருப்புகள் புகண்டாவுக்கு அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து நெருக்கடி மோசமானது. உகண்டா துருப்புகள், புகண்டா மன்னரின் அன்ரமனையைத் தாக்கி அரன்மனைக் காவர்களைக் கொன்றதாகவும் செய்திகள் தெரிவித்தன. மன்னரும் அவரது காவலாளிகளும் அரசாங்கத் துருப்புக்களை எதிர்த்துப் பல மணிநேரம் தாக்குதல் நடத்தினரென்றும் இறுதியில் அரசாங்கத் துருப்புகள் அரண்மனையைக் கைப்பற்றினரென்றும் சண்டை இங்கு நிறுத்தப்பட்டுள்ளது என்றும் கடைசியாக வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன.

**வரலாறு**

உகண்டா, கினியாவுக்கு மேற்கே மத்திய ஆபிரிக்காவிலுள்ள பெரியநாடு. 93,891 சதுரமைல் நிலப்பரப்பைக் கொண்டது. ஜனதொகை 73 லட்சமாகும். இங்கு நான்கு மாகாணங்கள் உண்டு. நான்கும் குடியரசுகள். இவற்றில் புகண்டா மாகாணமே பெரிதாகும், இதன் ஜனத்தொகை எட்டரை லட்சமாகும், நான்கு வருடங்களுக்கு முன்னர் உகண்டா பிரிட்டனிலிருந்து சுதந்திரமடைந்தது. 1963-ல் குடியரசானது. புகண்டாவின் பரம்பரை மன்னர்தான் குடியரசின் ஜனாதிபதி என்று அரசியல் சட்டம்கூறியது. பிரதம மந்திரி ஒபோட்டே மூன்று மாதங்களுக்கு முன்னர் அரசியல் சட்டத்தை ரத்துச்செய்து தாமே ஜனாதிபதியாகப் பிரகடனப்படுத்திக்கொண்டார். எதிர்க்கட்சிகள் யாவும் தடை செய்யப்பட்டன. ஒரு கட்சி சமுதாயமாக உகண்டாவில் செயல்படவேண்டுமென்று ஒபோட்டே உத்தரவிட்டார். இதனை எதிர்த்தவர்களில் புகண்டா அதிபர் முன்னணியிலிருந்தார். (பி. டி. ஐ.)

## கடலுக்கடியிலிருந்த பண்டைய நகரம்

நியுயோர்க், மே 26

கடல் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க விஞ்ஞானிகள், பசுபிக் கடலில் ஆறுயிரம் அடிக்குக்கீழே மூழ்கிய நகரமொன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதுபற்றிய விபரத்தை "டிரைட்டன்" எனும் பிரிட்டிஷ் நீர்மூழ்கிப் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

கோனர் எனப்படும் நுண்ணொலி அலைகளைக் கடலில் பாய்ச்சியபொழுது விசித்திரமான பொருள்கள் தட்டுப்பட்டன என்றும் அதனைத் தொடர்ந்து டெலிவிஷன் படப்பிடிப்புக் கருவிகளின் உதவியுடனும் அப்பொருள்கள் படம்பிடிக்கப்பட்டன என்றும் அப்பத்திரிகைதெரிவித்துள்ளது.

அந்தப்படங்கள் செதுக்கு வேலை அல்லது தூண்களிலுள்ள கல்வெட்டுகள் போன்று காட்சியளித்தனவாம்.

கடலில் புதையுண்ட நகரம், பெரு நாட்டின் கரைக்கப்பால் இருப்பதால், ஒரு காலத்தில் அந்தநாட்டில் வாழ்ந்த இன்கா நாகரிகத்தோடு இது தொடர்புகொண்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது: அந்தநாட்டின் கடற்கரை கடலினுள் அமிழ்ந்துவருவது தெரிந்த உண்மையாகும். மேற்கூறிய நகரத்தைக் கடல் கொண்டதற்கு இதுவே காரணமாகும்.

### தினேஷ் சிங்

புதுடில்லி, மே 25

கயானா சுதந்திரதினவிழாவில் இந்தியா சார்பில் கலந்துகொண்டுள்ளவெளிநாட்டிலாகாதுணைமந்திரிதினேஷ் சிங் தாயகம் திரும்பும் வழியில் யுகோஸ்லேவிய அதிபர் டிட்டோ. ஐக்கிய அரபுக் குடியரசுஅதிபர் நாஸர் ஆகியோருடன் பேச்சுக்கள் நடத்துவார்.

### மோதிர மர்மம்

பர்மிங்ஹாம், மே 26

மோதிரமொன்றைக் காணாது அந்த வீட்டில் ஒரேபரபரப்பு. அப்பொழுது வீட்டிலிருந்த ஒரு பெண் தனது மோதிரத்தைத் தேடி மூலைமுடுக்குகளிலெல்லாம் நோட்டம் விட்டுக்கொண்டிருந்தாள்

"அச்...சது...!" அவளது இடுப்பிலிருந்தபதினொன்று மாதக் குழந்தை இருமியது. மோதிரத்தின் மர்மமும் துலங்கிவிட்டது.

அப்பெண்ணின் மோதிரத்தை அக்குழந்தை விழுங்கிய விபரம் பின்னர்தான் தெரியவந்தது. பி டி ஐ)

### டாக்டர் மாலிக் பாங்காக் விஜயம்

பாங்ஹாக், மே 25

இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் மாலிக் நாளை இங்கு வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உத்தேச மலேசியப் பேச்சுக்கள் இம்மாத இறுதிக்குள் நடைபெறுமெனத் தெரியவருகிறது;

### விஷவாயு: மூவர் பலி

கல்கத்தா, மே 26

கல்கத்தா நகரிலுள்ள தெரு சாக்கடைக் குழி ஒன்றில் விஷவாயுவை உட்கொண்டதன் விளைவாக மூவர் பலியானூர்கள்.

### மீஸோ கிளர்ச்சியினர்

ராவல்பிண்டி, மே 26

மீஸோ கிளர்ச்சிக்காரர்களுக்கும் இந்தியத் துருப்புகளுக்குமிடையேகடுமையான சண்டை நடைபெற்று வருகிறதென்றும்மீஸோ கிளர்ச்சிக்காரர்கள் பலர் மாண்டனர் என்றும் பாகிஸ்தான் செய்தியொன்று கூறுகிறது.

டாஞங்

## 2 இராணுவ தலைவர்கள் சரணடைந்தனர்

### வடக்கில் தொடர்ந்து குண்டு வீச்சு

சைகோன், மே 26

தென்வியட்னாமின் வடக்கு நகரமான டானங்கில் கிளர்ச்சி நடத்திய இரண்டு உயர் இராணுவத் தலைவர்கள் அரசாங்கத் துருப்புகளிடம் சரணடைந்துள்ளனர்.

இவர்கள் இப்பொழுது தென்வியட்னாம் தலைநகர் சைகோனில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்வியட்னாம் அரசாங்கத்துருப்புகளுக்கும் கிளர்ச்சித் துருப்புகளுக்குமிடையே டானங்கில் சண்டை நடைபெற்றபொழுது இவ்விரு இராணுவ உயர் தலைவர்களும் பெரும் பங்கு கொண்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு எதிராக விசாரணைகள் நடைபெறவிருக்கின்றன.

**வடவியட்னாமில் தொடர்ந்து குண்டுவீச்சு**

இதற்கிடையே வடக்கு வியட்னாமில் அமெரிக்கவிமானங்கள் நேற்று தொடர்ந்து குண்டுவீச்சுகள் நடத்தின. ஹனோய்க்கும் சீனாவுக்குமிடையேயான ரயில்பாதைகளை அமெரிக்க விமானங்கள் நேற்று குண்டுவீசித் தாக்கின.

## கயானா சுதந்திரமடைந்தது

### காமன்வெல்த்தின் 23-வது உறுப்பு நாடு

ஜார்ஜ்டவுண், மே26

நூறுவருட பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பிரிட்டிஷ் கயானா இன்று விடுதலையடைந்தது. இலங்கை நேரப்படி இன்று காலை ஒன்பது மணிக்குச் சுதந்திரமடைந்த கயானா காமன் வெல்த்தின் 23-வது உறுப்புநாடாகச் சேர்ந்து கொண்டது.

பிரிட்டிஷ் கயானா சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து இந்தநாட்டுக்கு "கயானா" என்றபெயர் சூட்டப்பட்டுள்ளது.

**விழாக்கோலம்**

சுதந்திர மடைந்ததைக் குறிக்கும் முகமாக இன்று கயானா தலைநகர் ஜார்ஜ்டவுணில் நடைபெற்ற விழாவில் பல்லாயிக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர் ஐம்பதுக்கும் அதிகமான வெளிநாட்டு பிரதிநிதிகளும் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

இலங்கை, இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், சீனா உள்ளிட்டு பல நாடுகளின் தலைவர்கள் சுதந்திரதின வாழ்த்துச்செய்திகள் அனுப்பியுள்ளனர்,

காலனி ஆதிக்கத்தை ஒழிப்பதில் போராடவேண்டுமென்றும் ரஷ்யாவின் சகல உதவியும் ஒத்துழைப்பும் கிடைக்குமென்றும் சோவியத் பிரதமர் அனுப்பியுள்ள வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

சுதந்திரதின விழாவுக்கு கம்யூனிஸ்ட் சீனா அழைக்கப்படாதபோதிலும் சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் வாழ்த்துச் செய்தி அனுப்பி வைத்துள்ளார்.

### இதுவன்றோ ஞாபகசக்தி!

மெல்போர்ன், மே 27

பொலிஸாரினால் தேடப்பட்டுவந்த நகை வியாபாரி ஒருவர் பத்தொன்பது வருடங்களுக்குப் பின்னர் பொலிஸ் அதிகாரி றெக் ஹென்டென்ஸனினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நகை வியாபாரியைக் கைதுசெய்வதற்கு பொலிஸ் அதிகாரிக்குப் பயன்பட்டது, பத்தொன்பதுவருடங்களுக்கு முன்னர் அவர் கண்ட நகைவியாபாரியின் புகைப்படமாகும். என்னே ஞாபகசக்தி. (பி டி ஐ)

### 106 6!

சென்னை, மே 26

சென்னையில் நேற்று கடுமையான வெப்பம் நிலவியது. நேற்றைய வெப்பநிலை 106.6 டிகிரியாக இருந்தது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "சமயவாழ்வின் தத்துவத்தை கதை வடிவாகத் தந்தவர் சேக்கிழார்"

## சேக்கிழார் விழாவில் அறிஞர்கள் உரை

யாழ்ப்பாணம், வெள்ளி "சமயவாழ்வையே தாரக மந்திரமாகக் கொண்டு, சமயத்தின் சாரத்தை, சமய வாழ்வின் தத்துவத்தை இலக்கண ரீதியாகச் சொல்லாமல், கதைவடிவாக, தமது பெரியபுராணக் காப்பியத்தில் வடித்திருக்கிறார் சேக்கிழார். பெரிய புராணமும், சமயமும் சங்கமமாகிவிடுகின்ற தனித்தன்மையை அவர்படைத்த அந்த அழியாக் காவியத்தில் காணமுடிகின்றது."

அகில இலங்கை சேக்கிழார் மன்றத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற சேக்கிழார் விழாவில் வித்துவான் பொன். முத்துக்குமாரன் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

மன்றத்தலைவர் திரு. ம. ஸ்ரீகாந்தா தலைமையில் சேக்கிழார் விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றன. இந்நிகழ்ச்சிக்கு முன்பாக வண்ணை சிவன் கோவிலிருந்து சேக்கிழார் உருவப்படமும், பெரிய புராணம் ஏட்டுச் சுவடியும் விழா மண்டபம்வரை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

இதற்கு முன்பாக, யாழ். இந்துக்கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் சேக்கிழார் குருபூசை, காலை நிகழ்ச்சியாக இடம்பெற்றது. திரு. மு. ஞானப்பிரகாசம் உரை நிகழ்த்தினார்

மாலை நிகழ்ச்சியில் இடம் பெற்ற கருத்தரங்கத்துக்கு வித்துவான் க. கார்த்திகேசு தலைமைவகித்தார். கருத்தரங்கில் வித்துவான் பொன். முத்துக்குமாரன் 'சேக்கிழாரும்சமயமும்,என்னும் பொருள்பற்றி மேலும் பேசுகையில் கூறியதாவது:-

### சேக்கிழார் கனவு

நாட்டிலே பெண்கள் உத்தமிகளான, கற்புநெறிதவருத மங்கையர்களாக வாழ வேண்டுமென்பதற்காக இளங்கோ அடிகளார் சிலப்பதிகாரம் பாடினார். அதே போன்றே உலகெல்லாம் சைவம் பரவவேண்டுமென்ற நோக்கத்துடன் பெரிய புராணத்தைத் தந்தார் சேக்கிழார் சுவாமிகள். வையகம் வளம்பெற்று வாழ அவர்கண்ட கனவு தான் பெரியபுராணம்.

### சேக்கிழார் தத்துவம்

பல சமய நூல்களைக் கற்பதன் மூலம் ஒருவன் சைவனாகிவிட முடியாது; ஆண்டவன் அருளையும் பெற்றுவிட முடியாது. காட்டுக்கு ஓடிச் சென்று தவம்புரிவதனுலோ திருநீற்றை நெற்றியிலே அப்பிக் கொள்வதினாலோ, மூச்சைப் பிடித்துக்கொண்டு முழங்காலில் நிற்பதினாலோ, அன்றி தத்துவவிசாரணை செய்வதினாலோ, ஒருவன் உண்மையான சைவனாக இயலாது. அப்படியானால் இதற்குவிடை? பெரிய புராணத்தில் சேக்கிழார் இதற்கு விடையாகப் பெரிய தொரு தத்துவத்தை, இலகுவான தத்துவத்தை தந்திருக்கிறார்.

அவன் இல்லறவாழ்க்கையிலே ஈடுபட்ட குடும்பஸ்தனாக, பல்வேறு தரப்பட்ட தொழில் செய்பவனாக ஆதாட்டக்காரனாக, செல்வந்தனாக இருக்கலாம். எல்லாமே உள்ளத்திலேதான் தங்கியிருக்கிறது. இறைவனை நினைந்து நினைந்து, உள்ளமெல்லாம் இறைவனுடைய திருத்தொண்டை நினைந்து கொள்வதனால், அவன் உண்மையான சைவனாகலாம். இறைவனுடைய திருவருள் தான் கிடைக்கவேண்டும்.

### வேண்டாத நிலை

பெரியபுராணத்தை படித்துக்கொண்டு போகும் போது வேண்டும், வேண்டும் என்ற ஒரு நிலையை மாற்றி வேண்டாத ஒரு நிலையை ஏற்படுத்தும் ஒரு சக்தியை உணரலாம். லௌகீக நிலையிலிருக்கும் போது, பணத்தையும்பொருளையும் கேட்பவர்கள் ஒரு கூட்டம் வந்ததும் வேண்டாத துறவறத்தை விரும்பிக் கேட்பதை உணரலாம். அப்போது நான் என்ற சுயநலம் அகம்பாவம் அற்றும்போய்விடும்.

### சேக்கிழாரும் அரசியலும்

திரு. க. சிவராமலிங்கம் 'சேக்கிழாரும் அரசியலும்' என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் கூறியதாவது:

சட்டத்துக்கும் சம்பிரதாயத்துக்கும் அப்பாற்பட்ட அரசியல் தமிழகத்தில் ஏற்படவேண்டுமென்ற எண்ணத்தைப் பெரியபுராணத்தில் பதிந்திருக்கிறார் சேக்கிழார் சுவாமிகள்.

உண்மை அரசியலில் நின்று வாழ்ந்த அரசாட்சி புரியும் மனுநீதிச்சோழனுக்கு ஆண்டவன் வேதனை மிக்க சோதனையை கொடுத்து, அதில் அவன் சித்தியடைகிறானே என்று கவனிக்கிறார் மனுநீதிச்சோழ மன்னன் பெற்றெடுத்து வளர்த்த செல்வ மகன் பசுக்கன்றைக் கொன்றுவிட்டதற்காக அவனை தேர்ச்சில்லுக்குள் நெரிந்துவிடச் செய்கிறான் நீதிதவருத அந்தநேர்மையாளன். மந்திரிகளும், ஆலோசகர்களும், சட்டநிபுணர்களும் மகன்மீது தவறில்லை என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், நீதிக்காக தன்மகனை அந்தக் கன்று அனுபவித்த வேதனையை அனுபவிக்கச் செய்கிறான். அந்த மாமன்னன் சேக்கிழார் அருமையாக தரும் ஒரு கட்டம்.

### துரோகிக்கு மன்னிப்பு

காவி வஸ்த்திரம் தரித்து சிவக்கோலத்துடன் தன்னைக் கொல்லவந்த வேடதாரியை மன்னித்துஅனுப்பி வைக்கிறான் பெரிய புராணத்தில் வரும் இன்னொரு மன்னன். வந்தவன் துரோகியாக இருந்தாலும் சிவக்கோலத்துடன் வந்தவனை எதுவும் செய்யக் கூடாது என்ற பெரும் எண்ணம், அந்த விஷமியைப் பாதுகாப்புடன் பல மைல் தூரம் அனுப்பி வைக்கிறான். சேக்கிழார் கண்ட அரசியல் நேர்மை தவருத அரசியல்.

### சேக்கிழாரும் காவியமும்

வித்துவான் க. வேந்தனார் சேக்கிழாரும் காவியமும், பற்றிப் பேசுகையில் கூறியதாவது:

இறைவனுடைய திருவருளைப்பெற்று சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தைப் படைத்ததனால் தான் அது வாழும் காவியமாக இருக்கிறது. இப்படியான அருளைப் பெற்று வேறு ஒரு காவியமும் இன்னும்படைக்கப்படவில்லை. எத்தகைய வாழ்க்கை வாழ்ந்தாலும் இறைவன்மீது மாருத அன்பு வைத்தவர்களுக்கு அவன் அருள் கிடைக்கும் என்ற பெரும்லட்சியத்தைப் புகுத்தி இந்தக் காவியத்தைப் படைத்திருக்கிறார் சேக்கிழார் பெருமான்.

### சேக்கிழாரும் பெண்களும்

பண்டிதை தங்கம்[illegible] பாக்குட்டி 'சேக்கிழாரும் பெண்களும்' என்னும் பொருள்பற்றிய பேசுகையில் கூறியதாவது:

சேக்கிழார் படைத்த பெரியபுராணம் குறிப்பாக பெண்களுக்கேற்ற ஒரு வாழ்க்கைநூல், கற்பனையைக் கலந்து எதையும் மேலெழுந்தவாரியாக, எதேச்சையாக அவர் ஒன்வைத்தானும் கூறவில்லை. உண்மையாக நடந்த சம்பவங்களைப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார். இல்லறத்துக்கும் துறவறத்துக்கும் வேற்றுமை காட்டவில்லை அவர். இல்லறத்துக்குள்ளேயே துறவறத்தைக் காட்டியிருக்கிறார். அற நெறியிலேயே தலைவனும் தலைவியும் நடாத்திய இல்லற வாழ்க்கையை எமக்குப் பெண்ணுலகத்துக்குச் சொல்லிவைத்துள்ளார்

கருத்தரங்குக்கு தலைமை வகித்த வித்துவான் க. கார்த்திகேசு பேசுகையில், சைவத்தை வாழ்விக்கவந்த பெருந்தகைதான் சேக்கிழார் சுவாமிகள் என்று சொன்னார்.

திரு. ம. ஸ்ரீகாந்தா தமது தலைமையுரையில், வியாசப் போட்டிகள், பேச்சுப்போட்டிகள், சொற்பொழிகள் மூலம் சேக்கிழாரின் பெரிய புராணத்தை மாணவர்களிடையே புகுத்தலாமென்ருர்.

வித்துவான் க. கி. நடராசன் தமது வரவேற்புரையில் கூறியதாவது:

பெரிய புராணத்தைப் பாடிய சேக்கிழார் அதில் மன்னர்களைப் பாடினார், அவர்கள் மன்னர்களாகமட்டும் இருக்காமல் மாபெரும் தொண்டர்களாகவும் இருந்தார்கள் என்பதற்காக! வனிதையரைப் பாடினார். அவர்கள் வடிவழகிகள் என்பதற்காகவல்ல, அவர்கள் வளமிக்கவர்களாக, உத்தமிகளாக, தொண்டர்களாக வாழ்ந்தார்கள் என்பதற்காக! தெய்வீகத் தன்மைகளை மனதில் வைத்தே பாடினார். அவர் பெரிய புராணம் என்றுமோர் அழியாக்காவியம்.

திருவாளர்கள் வி. க. ஆறுமுகம், க. சோமசுந்தரம் ஆகியோர் தேவாரம் பாடினர். திரு. சி. விசுவலிங்கம் நன்றி கூறினர்.

# "இலக்கியச் சுவையினையும் உணர்த்த வேண்டும்"

## அகில இலங்கை சேக்கிழார் மன்ற ஆண்டு அறிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி "எந்த ஒரு நூலாயினும் மக்களின் கவனத்தை ஈர்க்கவேண்டுமாயின், அதனைச் சமயக்கண்கொண்டு காட்டுவதோடு நின்றுவிடாது, அதன் இலக்கியச் சுவையினையும் அவர்கள் உணருமாறு செய்தல் வேண்டும். இதற்காக, பெரிய புராணப் பாடல்களைத் தொகுத்து பெரியபுராண சாரம் ஒன்றினை வெளியிடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்"

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற சேக்கிழார் விழாவில் அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத் துணைச்செயலாளர் திரு. க. சொக்கலிங்கம் தமது ஆண்டு அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தமது அறிக்கையில் தெரிவித்தாவது:

ஒருகாலத்திலே, தமிழ் நாட்டிலே சைவம் தாழ்ந்தது; சமணம் தலையெடுத்தது. தமிழுக்குக் கதியாவார் சமணரே என்ற நிலையும் ஏற்படலாயிற்று. திருத்தக்கதேவர் செய்த 'சிந்தாமணி' தமிழிலக்கியத்தின் முடிமணியாகக் கொள்ளப் பட்ட காலம் அது. அநபாயசோழன் தொடக்கம் அனைவரும் அதன் இலக்கியச் சுவையிலே அத்து விதராகி நின்றனர்.

இந்நிலைகண்டு பொருராய்ச் சேக்கிழார் பெருமான் 'அம்மையும் இம்மையும் உறுதிபயக்கத்தக்க' சைவப்பெருநூல் ஒன்றினை யாத்திட முன்வந்தார். "சிவகதை எது? அதுகற்ற திறமைப்பேரார்? சீவகசிந்தாமணிபோல் இடையில் வந்த நவகதையோ, புராதனமோ, முன்னூல்உண்டோ? நானிலத்துச் சொன்னவர் ஆர்? கேட்டபேர் ஆர்? தவம் பண்ணிப்பேறு பெற்றதனிக் கதையோ?" என்று பலபடக்கிளர்த்தப்பட்ட வினுக்களுக்குச் சேக்கிழார் இறுத்த தனிப் பதிலே பெரியபுராணமாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத் தொகையையும் நம்பியாண்டார்நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியையும் அடியொற்றி எழுந்த இந்தப் பெருநூலுக்குத் தில்லை மன்ருடிய தெய்வமே 'உலகெலாம்' என அடியெடுத்துக்

(6ம் பக்கம் பார்க்க)




உங்களுக்கு இது நடைபெற விடாதீர்கள் -

பற் சொத்தையும் முரசு அரிப்பும் உங்களைப் பீடித்து, உங்களை வாழ்க்கையில் முன்னேறுமல் தடுக்க விடாதீர்கள்.

ஒரு பல் வைத்திய நிபுணர் உருவாக்கிய பொர்ஹான்ஸ் பற்பசை, பற்களுக்கு இரட்டிப்புப் பாதுகாப்புத்தருகிறது....... உங்கள் பற்களைச் சுத்தமாக்கிப் பற் சொத்தையைத் தடுக்க உதவுகிறது......முரசுகளைப் பேணி...... உங்கள் வாயையும் சுவாசத்தையும் சுகந்தமாக்குகிறது. பூரண பற்பாது காப்புக்குத் தினமும் பொர்ஹான்ஸ் பற்பசை உபயோகியுங்கள்.

பொர்ஹான்ஸ்

பற்பசை

முரசுக்கும் பற்களுக்குமான முதன்மையான பற்பசை.




பல் வைத்தியரால் தயாரிக்கப்பட்ட பற்பசை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## அறிவித்தல்

### கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### கலண்டர், டயறி உற்பத்தியாளருக்கு

1967-ம் ஆண்டிற்குகலண்டர், டயறி உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் கடதாசியின் அளவை இக்கந்தோரில் கிடைக்கக்கூடிய படிவத்தில் நிரப்பி அனுப்பும்படி, எல்லா கலண்டர், டயறி உற்பத்தியாளரும் வேண்டப்படுகின்றனர்.

விண்ணப்பங்களாவது, 1966-ம் ஆண்டு ஜுன் மாதம் 7-ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ, கிடைக்கக் கூடியதாக அனுப்பவேண்டும்.

பொது முகாமையாளர்
கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

70, யோர்க் வீதி,
கொழும்பு-1
22-5-1966. 430

## நால்வர் பலி

ஹஸாரிபாக், மே 29

கடுமையான வெப்பம் காரணமாக நான்கு பேர் இங்கு உயிரிழந்தனர். இவ்வருடத்தில் மொத்தம் 6 பேர் கோர வெயிலுக்குப் பலியாகியுள்ளனர். இங்கு 109 டிக்கிரியில் வெப்பநிலையிருக்கிறது. (பி. டி. ஐ.)


நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
என்.டி. ராமராவ் - கே. மாலதி
நடித்த
பாதாள பைரவி

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
பேயா தினங்களில் 4 காட்சிகள்
ராமச்சந்திரன் வைஜயந்திமாலா
நடித்த
வாழ்க்கை


## அறிவித்தல்

ஊர்காவற்றுறை மேற்கு கணபதி சிவலிங்கம் ஆகிய நான் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ் நொத்தாரிசுவாகக் கடமையாற்ற என்னை நியமிக்கும்படி, இத்திகதியிலிருந்து ஒரு மாதத்தின்பின் பதிவு காரியகர்த்தர் அவர்கட்கு விண்ணப்பஞ்செய்யவிருக்கிறேன் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன். க. சிவலிங்கம், ஊர்காவற்றுறை.
25-5-66 441

## புதுவருட உத்தியோகத்தர்கள்

வல்வெட்டித்துறை, வியா.

தொண்டமானாறுஇளைஞர் மறுமலர்ச்சிக்கழகக்கூட்டம் திரு. இ. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. இ. சண்முகலிங்கம், காரியதரிசிகள்: திருவாளர்கள் மு. தருமரத்தினம், பொ. புவனேந்திரன், தனாதிகாரி: திருசி. சுப்பையா திருவாளர்கள் கே. வி, சாமி, பொ; திருப்பதி, கே. தங்கராசா, சா. தேவராசா, இ. சிவசுப்பிரமணியம் ஆகியோரைக்கொண்ட நிர்வாக குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## தலைமையாசிரியர் தற்கொலை

வல்வெட்டித்துறை, வியா.

அல்வாய் சைவப்பிரகாச வித்தியாசாலை தலைமையாசிரியர் திரு. கே. சி. சதாசிவம் மனக்கவலைகாரணமாக வீட்டின் முன்புறத்திலுள்ளகிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

மரணவிசாரணை அதிகாரி விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.


REGAL—JAFFNA
NOW SHOWING!
URSULA ANDRESS
in
H. Rider Haggard's
SHE
(Cinemascope - Tecnicolor)

இப்பொழுது
திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடோர்ன் (பதுளை)
தீவொளி (நுவெரேலியா)
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமூவிஸ்
தெய்வத்தாய்
இசை:
விஸ்வநாதன்—ராமமூர்த்தி


# மூளாய் கொலை வழக்கு: குற்றப்பத்திரிகை தாக்கல்

மாவிட்டபுரம், வியாழன்

சென்ற 18-ந் திகதி இரவு மூளாயைச் சேர்ந்த சுப்பர் முருகேசு என்பவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டதுசம்பந்தமாகரிமாண்டில் வைக்கப்பட்டிருந்நவர்களான சுப்பர் கணபதி அவரின் மகனான தாராசிங் என்றழைக்கப்படும் தெய்வேந்திரம் ஆகிய இருவரும் நேற்று மல்லாகம் நீதிபதி திரு. ஜீ. எவ். எச். அத்துறுபான முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது, சங்கானை பொலிசார் சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்தார்கள்.

குற்றப்பத்திரிகையில் சுப்பர் கணபதி சுப்பர் முருகேசுவைச் சுட்டுக் கொலை செய்ததாகவும் அக்கொலைக்கு தெய்வேந்திரம் உடந்தையாக இருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ததைத் தொடர்ந்து பொலிசார் இக்கொலை சம்பந்தமாகக் கைப்பற்றிய துப்பாக்கி, வேற்றுத்தோட்டாக்கள், 85 சன்னங்கள், 9 வோடிங்ஸ், காலம் சென்றவரின் உடம்பிலிருந்து துண்டிக்கப்பட்ட சன்னம் போன ஓட்டையுடன் கூடிய தோல் ஆகியவற்றை நீதிபதி முன்னிலையில் சமர்ப்பித்து இவற்றை அரசாங்கப் பரிசோதகரின் பரிசிலனைக்கு அனுப்ப உத்தரவிடும்படி விண்ணப்பித்தார்கள்.

நீதிபதி இவற்றை அரசாங்க பரிசோதகரின் பரிசோதனைக்கு அனுப்ப உத்தரவிட்டு வழக்கை விசாரணைக்காக இம்மாதம் 30-ந் திகதிக்கு ஒத்தி வைத்து அத்திகதிவரை எதிரிகளை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். சப் இன்ஸ்பெக்டர் திரு. மெண்டிஸ் பொலிஸ் தரப்பில் ஆஜரானார்.

# பணத்தையும் சங்கிலியையும் பறித்ததாக இரு பெண்கள் மீது வழக்கு

மாவிட்டபுரம், வியாழன்

சங்கானை கிழக்கைச் சேர்ந்த 65 வயது நிரம்பிய பாட்டி ஒருவர் தனக்குச் சொந்தமான சங்கிலியையும் பணத்தையும் தனது பேத்திகளான இரு யுவதிகள் அடித்துப் பறித்ததாக மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துறுபான முன்னிலையில் ஒரு தனிப்பட்ட வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

இவ்வழக்கில் சங்கானை கிழக்கைச் சேர்ந்த செல்விகளான தர்மலிங்கம் தர்மசோதி, தர்மலிங்கம் சாந்தசோதி ஆகிய இரு சகோதரிகளும் அவர்களின் பாட்டியான வைத்திலிங்கம் கைம்பெண் செல்லமுத்துவின் 840 ரூபாய் பெறுமதியான தங்கச் சங்கிலியையும் 200 ரூபாய் ரொக்கப் பணத்தையும் அடித்துப் பறித்ததாகவும் தொண்டையைத் திருகி பலாத்காரம் பிரயோகித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வைத்திலிங்கம் கைம்பெண் செல்லமுத்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவ தினம் 4-30 மணியளவில் வீட்டு விறுந்தையில் இருந்தேன். எதிரிகள் இருவரும் எனது மகன் தர்மலிங்கத்தின் பிள்ளைகள். அச்சமயம் எதிரிகள் இருவரும் அவ்விடம் வந்து அறைக்கதவை உதைத்தார்கள். பின்னர் என்னிடம் தங்களின் தகப்பனார் தர்மலிங்கம் எங்கே என்றும் அவரிடம் உறுதியும் சங்கிலியும் வாங்கவேண்டுமென்றும் கூறினார்கள். நான் தர்மலிங்கம் வரவில்லை எனக் கூறினேன். அவர்கள் அறைக்குள் நுழைந்து அலுமாரியைத் திறந்து சங்கிலியையும் காசையும் எடுத்துக்கொண்டு வெளியில் வந்து தர்மலிங்கத்தின் படத்தையும் எடுத்தார்கள். பிறகு மூதலாம் எதிரி எனது கழுத்தை ஒரு கையால் திருகிக்கொண்டு மற்றக் கையால் எனது வாயை மூடி சைகை காட்டினார். சத்தம் போடவேண்டாமென நான் சத்தம் போடாமல் இருந்தேன். முதலாம் எதிரி உன்னிடம் பொலிசிற்குப் போக ஆட்கள் இல்லாவிட்டால் நான் போய் பொலிசில் கூறுவதாகக் கூறினார், எனக்கு அறிவில்லாமல் [illegible] எடுத்ததும் பார்த்தபோது எதிரிகளை அங்கு காணவில்லை நான் மகன் தர்மலிங்கத்திற்கு கொழும்புக்கு அறிவித்து அவர் கொழும்பால் மூன்றும் நாள் வந்து பொலிசில் புரார் செய்தார். எதிரிகளின் வீடு எனது வீட்டிலிருந்து கால் மைல் தூரத்திலிருக்கிறது. அவர்கள் எடுத்துச் சென்ற சங்கிலி என்னுடையது.

நீதிபதி மேல் விசாரணையை ஆடிமாதம் 23-ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார் வழக்காளி தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சேனாதிராசாவின் உதவியுடன் திரு ஆர். கண்ணுத்துரை ஆஜரானார்.

## மனைவியையும் பிள்ளைகளையும் கொன்றார்

### பத்துவருடக் கடுழியம்

கழுத்துறை, புதன்

தமதுமனைவியையும் 4குழந்தைகளையும் கொலைசெய்ததாக துறைமுக கார்ப்பரேசனைச் சேர்ந்த தொழிலாளரான சீமன் என்பவர் மீது தொடரப்பட்டவழக்கு கழுத்துறை அஸைஸ் நீதி மன்றத்தில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்ட போது அஸைஸ் நீதியரசர் திரு. ஓ. எல் டி கிறெட்சர் அவருக்கு 10வருட கடுழியச் சிறைத் தண்டனை அளித்து தீர்ப்பளித்தார்.

## 4கொத்துக்குறைவு

வல்வவட்டித்துறை, வியா.

வல்வெட்டித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குஇவ்வாரக் கூப்பனுக்கு வழங்கப்பட்டிருக்கும் நெல்லில் மூடை ஒன்றுக்கு சராசரி 4கொத்து குறைவாக இருப்பதாக சங்க மனேஜர் திரு. து. நவரத்தினம் யாழ்ப்பாணம்உணவுக்கட்டுப்பாட்டதிகாரிக்கு தந்திமூலம் அறிவித்துள்ளார்.


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

கார்

இரண்டு கதவுடைய நல்ல நிலைமையிலுள்ள காட்சியில் வைக்கக்கூடிய CN இலக்க மொரிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. எகுபா(f)லி அன்கோ லிமிட்டெட், "லொக்கேட் மில்ஸ்", கொழும்பு-12, என்ற விலாசத்தில் பார்வையிடலாம். போன்: 78436. 390

கார்

4 ஸ்ரீ 3000 இலக்கத் தொடருடைய நல்ல நிலைமையிலுள்ள காட்சியில் வைக்கக்கூடிய இரண்டு வோக்ஸ் வகன் கார்கள் விற்பனைக்குண்டு. எகுபா (f) லி அன் கோ லிமிட்டெட், "லொக்கேட்மில்ஸ்" கொழும்பு-12 என்ற விலாசத்தில் பார்வையிடலாம். போன்: 78436. 391

### கல்வி

கலை, விஞ்ஞானம்

கலை/விஞ்ஞானம் ஆகியவற்றிற்கு அனுபவமுள்ள (Hons) செய்த பட்டதாரிகளாலும் 3 மாத, 6 மாத, 1 வருட தமிழ், ஆங்கில சுருக்கெழுத்துக்கும் மற்றும் வர்த்தகப் பாடங்களுக்கும், ஆசிரியகலாசாலைப் பிரவேச பரீட்சைக்கான பாடங்களுக்கும்44வருடஆசிரிய அனுபவமுள்ளவரால் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. இத்துடன் ஆங்கிலத்திற்கும் தையலுக்கும், சிங்களத்துக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. விண்ணப்பிக்கவும்: வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை/வதிரி, கரவெட்டி. (393)


## பேச்சுப்போட்டி

சுழிபுரம், வியாழன்

யாழ். மேற்கு ஆசிரியர் சங்கம் நடாத்திய பேச்சுப்போட்டி, இசைப்போட்டி, ஆகியன சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன. போட்டிக்கு சங்கத்தலைவர் திரு என். சிவஞானம் தலைமை வகித்தார். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வெற்றிக்கிண்ணங்களும் பரிசளிக்கப்பட்டன. செயலாளர் சபா நடேசன் நன்றி கூறினார்.

## பிரிவுபசாரம்

சாவகச்சேரி, புதன்

சாவகச்சேரி இந்துக்கல்லூரி தமிழ்ப் பாடசாலை தலைமையாசிரியர் திரு எஸ் கே வாளரசன், மண்கும்பான் பாடசாலைக்கு மாற்றலாகி செல்வதையிட்டு பிரிவுபசாரக் கூட்டமொன்று நடைபெற்றது

கல்லூரி அதிபர் திரு எம் வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திருவாளர்கள் எஸ் முத்துவேலு, எம் சபாரத்தினம், சி சதாசிவம், திருமதி ஆர் சிவநாராயணமூர்த்தி ஆகியோர் தலைமையாசிரியரின் சேவையைப் பாராட்டி பேசினார்கள் இசைப்புலவர் சி செல்லத்துரை வாழ்த்துப்பாபாடி வழங்கினார்


பி. சி. சி. சுவேந்திரா
தெரிவுப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட
அதிர்ஷ்ட இலக்கங்கள்
9 - 16 - 5
இப்போட்டியில் வெற்றியீட்டியவர்களின்
பெயர் விபரங்கள் முன்னரே வெளியிடப்பட்டன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு விவகாரம் பற்றி உயர்கட்ட மகாநாடு

## நாளை கொழும்பில் நடைபெறும்

கொழும்பு, வியா.

கச்சதீவு யாருக்குச் சொந்தமானது என்ற விவகாரம் பற்றி இலங்கை அரசாங்கத்துக்கும், இந்திய அரசாங்கத்துக்குமிடையே உயர்கட்ட மகாநாடு எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

வெளிநாட்டு அமைச்சு அலுவலகத்தில் நடைபெறவிருக்கும் இப்பேச்சு வார்த்தையில் இலங்கை சார்பில் வெளிநாட்டு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி ஜி. வி. பி. அமரசிங்கா தலைமையில் ஒரு கோஷ்டியும், இந்திய அரசாங்கச் சார்பில் இலங்கையிலுள்ள இந்தியஸ்தானிகர் தலைமையில் ஒரு கோஷ்டியும் பங்குபற்றும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நடுவே கடலிலுள்ள இக்கச்சதீவு கள்ளக் கடத்தல் நடவடிக்கைகளுக்கு உதவியாயிருப்பது பற்றிக் கண்டுபிடித்தபின்னரே இது ஒரு பிரச்னைக்குரிய விஷயமாகியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கள்ளக் கடத்தற் பொருட்கள் அங்கிருந்து இங்கு கொண்டுவருவதைத் தடைசெய்ய கடற்படை ரோந்து நடவடிக்கை மேற்கொள்ள அரசாங்கத்தின் அனுமதி கோரிய போது, கச்சதீவு இலங்கைக்கு சொந்தமா அன்றி இந்தியாவுக்கு சொந்தமானதா என்ற சந்தேகம் தோன்றியது.

---

### சிங்களத்தை..

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

முன்னர் யாழ்ப்பாணத்திலுள்ள எல்லா கல்லூரிகளிலும் சிங்களம் படிப்பிக்கப்பட்டு வந்தது. சிங்களச் சட்டம் உண்டாக்கப்பட்டபோது தமிழ் பேசும் மக்கள் தங்கள் சுயமரியாதையைக் காப்பாற்றும் பொருட்டு சிங்களத்தை படிக்கவிரும்பவில்லை. இது தான் எங்கள் நிலை. எங்கள் மேல் சிங்களம் திணிக்கப்பட்டதை நாம் விரும்பவில்லை.

---

### சிறுகதை உலகில் ஜானகிராமன்

யாழ்ப்பாணம், வியா.

''தமிழ்ச் சிறுகதை உலகிலே லா. ச. ரா., தி ஜானகிராமன், ஜெயகாந்தன் என்னும் மூவரும் குறிப்பிடப்படக் கூடியவர்களே யென்றாலும் சமீபகால அவதானிப்பில் லா. ச. ரா.வும், ஜெயகாந்தனும் கலைத்துவ மதிப்பில் குறைந்துவிட்டார்கள். திரு. ஜானகிராமன் ஒருவர் மாத்திரமே தனி ஒளி வீசித்திகழ்கிறார்'' என்று சிறுகதை ஆசிரியர் திரு. எஸ். பொன்னுத்துரை 'இலக்கிய நண்பர்கள் சங்க' கூட்டத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை விவேகானந்தக்கல்லூரியில் கவிஞர் அம்பி தலைமையில் மேற்படி சங்கக் கூட்டம் நடைபெற்றது.

திரு. எம். ஏ. ரஹ்மான், சிறுகதை ஆசிரியர் வ. அ. இராசரத்தினம் ஆகியோரும் பேசினர்

'ஏடு' நிறுவன உறுப்பினர் நேற்று முன்தினம் தெல்லிப்பளையில் கூடி, திரு. எஸ். பொன்னுத்துரையின் ஒரு குறுநாவலை இரண்டாவது வெளியீடாக வெளியிடுவதெனத் தீர்மானித்தனர்.

---

### இந்துப் பல்கலைக்கழக ஆலோசனை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் இந்துப் பல்கலைக்கழகம் நிறுவுவது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஜூன் மாதம் 1-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறுமென அறியப்படுகிறது

கல்விமான்களும், கல்லூரி அதிபர்களும், தலைமையாசிரியர்களும், பெற்ருேர்-ஆசிரியர் சங்க அங்கத்தவர்களும் கலந்துகொள்ளும் இக்கூட்டத்தில் யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இந்துபல்கலைக்கழகத்தின் அவசியத்தைப் பற்றிப் பேசுவார் எனவும் அறியப்படுகிறது.

---

மலேசியத் தகராறு

### மாலிக்-துன்ரஸாக் இன்று சந்திப்பு

பாங்ஹாக், மே 26

மலேசியத் தகராறு குறித்து இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் மாலிக்கும் மலேசியா துணைப்பிரதமர் துன் அப்துல் ரஸாக்கும் நாளை வெள்ளிக்கிழமை இங்கு சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார்கள். தாய்லாந்து தலைநகர் பாங்ஹாக்கில் நடைபெறும் பேச்சுககள், துங்கு-சுகர்ணோ சந்திப்புக்கு வழி ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது.

மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானும் இந்தோனேஷிய அதிபர் சுகர்ணோவும் சந்திப்பார்களா இல்லையா என்பது நாளை இங்கு ஆரம்பமாகும் பேச்சுக்களில் முடிவு செய்யப்படும்.

---

### இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவிலில் மாலை 6 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் தலைமையில் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. சி. பாலசுப்பிரமணியன் ''திருவாசகத்தில் ஒரு வாசகம்'' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார். இரவு 7 மணிக்கு சுக்கிரவார அம்மன் உற்சவமும் உள்வீதிவலமும் நிகழும்.

ஃ ஃ ஃ

மாலை 6 மணி முதல் 9 மணி வரை பின்வரும் தேவஸ்தானங்களில் அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்க ஆதரவில் பிரசங்கங்கள் நிறைவேறும்;

நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம் பிரசங்கியார் திரு த. சுப்பிரமணியம் ''பெரிய புராணம்'' என்னும் பொருள் பற்றியும், நல்லூர் கிழக்கு மூத்தவிநாயகர் தேவஸ்தானத்தில் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் ''சிறுத்தொண்டர்'' என்னும் பொருள் பற்றியும், நீராவியடி கடையிற் சுவாமி தேவஸ்தானத்தில் திரு. பொ. பாலசுப்பிரமணியம் ''கண்ணப்ப நாயனார்'' என்னும் பொருள் பற்றியும் பிரசங்கங்கள் நிகழ்த்துவர்.

ஃ ஃ ஃ

சித்தங்கேணி மகா கணபதிப்பிள்ளையார் கோவில் நான்காம் திருவிழா. இரவு உயிர் யானை மீது சுவாமி வீதிவலம் வருவார்.

---

### 'சன்றைஸ் வெற்றிபெற்றது

சாவகச்சேரி, வியா.

சாவகச்சேரி சன்றைஸ் விளையாட்டுக்கழகத்திற்கும், காங்கேசன்துறை அபிவிருத்தி விளையாட்டுக்கழகத்திற்கும் கிநேக பூர்வமாக நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில், சாவகச்சேரி சன்றைஸ் வெற்றிபெற்றது.

காங்கேசன்துறை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. கே. தனபாலசிங்கம் மத்தியஸ்தராக கடமையாற்றினர். 'சன்றைஸ்' கோஷ்டியைசேர்ந்த ஐ. இராஜேந்திரன், கணபதிப்பிள்ளை' சிகி ஆகியோர் திறமையாக விளையாடினர்கள்.

---

யாழ். பாடசாலைகளுக்கான

### ட்ருக் அன்பீல்ட் விளையாட்டுப்போட்டி

#### இம்மாதம் 28, 29ல் நடைபெறும்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கான ட்ருக் அன்பீல்ட் விளையாட்டுப்போட்டி இம்மாதம் 28-ம் 29-ம் திகதிகளில் பரமேஸ்வராக் கல்லூரிமைதானத்தில் நடைபெறவிருக்கிறது. யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 21 பாடசாலைகள் பங்குபற்றும் இப்போட்டிகளுக்கு டாக்டர் ஜோன் சென் ஜோர்ஜ் பிரதம விருந்தினராக கலந்துகொள்வர். இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெறவிருக்கும் இப்போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலைகள் விபரம் வருமாறு:

சந்திரபுரம் ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலயம், சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி, நெடுந்தீவு மஹாவித்தியாலயம், ஏழாலை மஹாவித்தியாலயம், சென். ஜேம்ஸ் மஹாவித்தியாலயம், கரம்பன் சண்முகநாத மஹாவித்தியாலயம், மல்லாகம் இந்துக்கல்லூரி, நாவற்குளி மகஹாவித்தியாலயம், நயினாதீவு மஹாவித்தியாலயம், நெல்லியடி மஹாவித்தியாலயம், ஓஸ்மானியக் கல்லூரி, பூனகரி மஹாவித்தியாலயம், புங்குடுதீவு மஹாவித்தியாலயம், சிங்கள மஹாவித்தியாலயம், தெல்லிப்பழை வீமன்காமம் ஆங்கிலப்பாடசாலை, உடுவில் மான்ஸ் ஆங்கில பாடசாலை, உருத்திரபுரம் மஹாவித்தியாலயம், உசன் ராமநாதன் மஹாவித்தியாலயம், வசாவிளான் மஹாவித்தியாலயம், வேலணை மஹாவித்தியாலம், கனகரத்தினம் மத்திய மஹாவித்தியாலயம்.

---

### இலக்கியச்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்ததாயின், அதன்சிறப்பினை யாரே கூறவல்லார்.

பெரியபுராணத்தின் சிறப்பினை உணர்ந்த நல்லைநகர் ஆறுமுகநாவலர், அதனைப் பதிப்பித்து வெளியிட்டதோடு, வசன உருவிலும் தந்துள்ளார்.

இத்தகைய பெருநூலையும் அதனையாத்த பெரும் புலவரையும், நினைவு கூர்தல் இன்றியமையாத ஒன்றேயாகும். சிறப்பாகச் சைவ ஒழுக்கங்களும், மரபுகளும் கை நெகிழ்க்கப்பட்டு, மக்கள்சைவத் தமிழிலக்கியங்களைப் புறக்கணித்துவரும் இக்காலத்திலே, சேக்கிழார் போன்ற சைவப்பெருமக்களின் நினைவையும், அவர்களின் நூல்களையும் பேணிக்காத்தல் [illegible] தொண்டாகும்.

---

### பிரதமரை அழைக்க மேயர் செல்வார்

கொழும்பு, வியா.

பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்காவின் யாழ்ப்பாண விஜயம் சம்பந்தமாக ஏற்ற ஒழுங்குகளைச் செய்வதற்காக யாழ்ப்பாண மேயர் திரு. அல்பிரட் துரையப்பா அடுத்த வாரம் கொழும்பு வரவிருக்கிருர். இவர் இங்கு வந்து பிரதமர் வடபகுதிக்கு விஜயம் செய்வதற்கான திகதியை நிர்ணயிப்பதில் உதவிபுரிவார்,

யாழ்ப்பாண மாநகரசபையின் அழைப்பின் பேரில் வடபகுதிக்கு செல்லும் பிரதமர் அநேகமாக ஜூன் மாதம் இரண்டாம் வாரத்தில் தனது விஜயத்தை மேற்கொள்ளுவதற்கான ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன.

---

### உத்தியோகத்தர் தெரிவு

கிளாலி, வியாழன்

கிளாலி பலநோக்கு கூட்டுறவுச்சங்கப் பொதுக் கூட்டம், சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பரிசோதகர் திரு இ இராசசுந்தரம் உட்பட பல அங்கத்தவர்கள் சமுகமளித்தனர்.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு வ வரப்பிரகாசம், காரியதரிசி திரு சி நீக்கிலாப்பிள்ளை, உபதலைவர்: திரு ச மாற்கு. ஆறு பேர்கொண்ட நிர்வாகசபையும்தெரிவுசெய்யப்பட்டது.

---

### 'ஆலயத் திருப்பணி மேலானது'

உடுப்பிட்டி, வியா.

'இறைவன் இல்லையென்று எவரும் கூற முடியாது, அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும். ஆலயங்கள் ஆண்டுதோறும் வளர்ச்சியடைந்து வரவேண்டுமேதவிர, கீழ் நிலைக்குப் போகக்கூடாது' என்று நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய மகாசபைப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமைவகித்த நெல்லியடி அறநெறிக் கழகத் தலைவர் திரு. க. கந்தப்பு பேசுகையில் கூறினர்.

---

### ராக்கெட்நிபுணர் கொலை

கொலம்பஸ், மே26

அமெரிக்க ராக்கெட் நிபுணர் பேராசிரியர் லோறென் ஈ பொலிங்கர் கொலை செய்யப்பட்டதுகுறித்து பொலிஸார் தீவிர புலன்விசாரணை நடத்தி வருகின்றனர்.

இவர் வெகு சமீபமாக வைத்து சுட்டுக்கொலைசெய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. தலையில்ஒரு காயமும் உடலில்நான்கு காயங்களும் காணப்பட்டன. (பி.டி.ஸி,)

---

### குழாய்நீர் விநியோகம் தடைபட்டது

கல்கிசை, வியாழன்

பிரதான தண்ணீர் விநியோகக் குழாயில் ஏற்பட்ட வெடிப்புக் காரணமாக தெஹிவளை-கல்கிசை மாநகரசபைப் பகுதிகளும் கோட்டேயும் பெரிதும் பாதிக்கப்பட்டன.

வீதியோரக் குழாய்களிலும் மற்றும் பொதுவான இடங்களிலிருக்கும் குழாய்களிலும் நீர் விநியோகிக்கப்படவில்லை. இதுசம்பந்தமாக இன்றுபகல் விடுக்கப்பட்ட அறிக்கையில் கல்கிசை-தெஹிவளை பகுதிகளில் இரண்டு நாட்களுக்கும் கோட்டே பகுதியில் நான்கு நாட்களுக்கும் குழாய் நீர்விநியோகிக்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### சீன-பாகிஸ்தான் பாதுகாப்பு உடன்படிக்கை

புதுடில்லி, மே 26

கிழக்குப்பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு சீனுவும் பாகிஸ்தானும் கூட்டாக ஒரு உடன்படிக்கை செய்திருப்பதாக இங்குள்ள நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

அண்மையில் சீனத்தலைவர்கள் கிழக்குப் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருந்த பொழுது இது பற்றி விரிவான முறையில் ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கானுக்கும் சீன அதிபர் லியூ ஷாவோ ஷிக்குமிடையே ஒரு வகையான பாதுகாப்பு உடன்படிக்கைஇருக்கிதென்பதை இந்திய அரசாங்கம் உணர்ந்திருக்கிறதென்று பாதுகாப்பு மந்திரி இலாகா பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

---

### சம்பள உயர்வும்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

17/50 விசேஷ பஞ்சப்படி வேண்டும் என்ற ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் மற்ருேர் கோரிக்கையை ஆராய, தேயிலை சம்பள நிர்ணய சபை கூடுகிறது. இதில் அரசாங்க-முதலாளி-தொழிலாளர் பிரதிநிதிகள் கலந்து கொள்கிருர்கள்.

தினசரிச்சம்பளத்தை உயர்த்தும் விஷயத்தில் முதலாளிமார் சம்மேளனம் அனுதாபம் கொண்டிருப்பதாயும், ஆனல் எவ்வளவு என்பதை அது நிர்ணயிக்க வேண்டியிருக்குமென்றும் இ. தொ. கா. பேச்சாளர் ஒருவர் கூறினர். முதலாளிமார் சம்மேளனமும் இதை ஊர்ஜிதம் செய்தது. திரு. தொண்டமான் தலைமையில் பிரதிநிதிகள் கோஷ்டி மகாநாட்டில் கலந்துகொள்ளும்.

அதே சமயம், 17,59 பஞ்சப்படி கிடைக்காவிடில் இலங்கை முழுதும் வேலைநிறுத்தம் செய்யப்படும் என்ற ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் பயமுறுத்தலுடன் சம்பள நிர்ணய சபைகூடுகிறது. திரு அஸீஸின் இந்தவேலைநிறுத்த எச்சரிக்கையை திரு. தொண்டமானும் ஆதரிப்பதாகக் கூறப்பட்டது.

தங்களைஏற்கனவே கலந்து கொள்ளவில்லை என்ற காரணத்தால், வேலைநிறுத்தம் செய்யும் அழைப்பை, சமசமாஜக்கட்சியின் லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் நிராகரித்துவிட்டது.

இவ்வாண்டு ஆரம்பத்தில் மாதம் 17/50 விசேஷ கிராக்கிப்படி தோட்டத்தொழிலாளருக்கு வழங்கப்பட வேண்டும் என்று முதலாளிகளைக்கோரும் தனிப்பட்ட அங்கத்தினர் தீர்மானம் ஒன்று பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டது.

---

### காவல் நிலைகள்

ராவல்பிண்டி, மே 26

மேற்குப் பாகிஸ்தானிலும் கிழக்குப் பாகிஸ்தானிலும் உள்ள இரண்டு காவல் நிலைகள் இம்மாத இறுதிவரை நிறுத்திவைக்கப்படுமென்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

---

### கயாஞ

ஜோர்ஜ்டவுண், மே 26

கயாஞ விடுதலைத்தினத்தை குறித்து நாட்டு மக்கள் இன்று பிரதான வீதிகள் வழியாகபாட்டுப் பாடியும் நடனமாடிக்கொண்டும் மகிச்சிகொண்டாடினர். கயாஞ என்பது பல நதிகள் பாயும் நாடு என்று பொருளாகும்.

---

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி [illegible] இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 27ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org